| Scale | D | Tempo | 122 | Style | Ballroom> Schlager Alp |
|---|---|---|---|---|---|

1. கல்வாரி சினேகம்

கல்வாரி சினேகம் கரைத்திடும் என் மனம்
தந்தேன் என்னையே உம் பாதம்
கலங்கிடும் மாந்தரை கனிவோடணைத்திடும்
கரங்களில் என்னையே அற்பணித்தேன்

1

தலை சாய்க்க இடமில்லை என்றவரே – நீர் (மத் 8:20)
தலை சாய்த்து சிலுவையில் ஜீவன் தந்தீர்
எம் பாவ சாபங்கள் சுமையானதோ (1பேதுரு 2:24)-எங்கள்
சிரம் தாழ்த்தி பணிந்தும்மை வணங்குகின்றோம் - கல்வாரி

2

இராஜாதி இராஜாவாய் இருப்பவரே – உம்மை(வெளி 17:14)
வாரினால் அடித்து வதைத்தனரோ (மத் 27:26)
இராஜாக்கள் ஆசாரியர் ஆக்க எம்மை நீர் (வெளி 1:6)
முள் முடி ஏற்றீர் உம் சிரசதினில் (யோவான் 19:5)-கல்வாரி

3

உலகத்தின் ஒளியான என் இயேசுவே (யோவான் 9:5)
உம் கருணையின் கண்களை கட்டினரோ (லூக்கா 22:64)
இருளின் மாந்தர் தனை விடுவித்திடவே நீர்
இருளின் பாதைதனில் நடந்தீரன்றோ - கல்வாரி

---